செ.வெ.எண். 17/ஜனவரி செய்தி வெளியீடு நாள்: 11.01.2016

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகனாந்தன்,இ.ஆ.ப., அவர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.





தருமபுரி மாவட்டம் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (11.01.2016) மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், சாலையில் உள்ள மரங்களை அகற்றி சாலைகளை அகலப்படுத்தி தர கோருதல், வேலைவாய்ப்பு, கல்வியில் படிப்பதற்கு உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 240 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தனி துணையாட்சியர்கள் செல்வி எஸ். வள்ளி (ச.பா.தி), (கலால்) திருமதி மல்லிகா, (நில அளவை) திருமதி. பாப்பாத்தி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திருமதி. இலாஹிஜான், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.